DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No. 366/2025
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : தங்கமாரி |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 17.02.2026 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் வாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். எனக்கும் மற்றும் 1ம் பிரதிவாதிக்கும் நடந்த திருமணத்தின் பொழுது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எண்ணம் – 2 வா.சா.ஆ.1 ஆகும். மைனர் வாதி கடந்த 16.11.2009 அன்று பிறந்ததற்காக பிறப்பு சான்று வா.சா.ஆ.2 ஆகும். (அசலுடன் ஒப்பிடப்பட்டது) மைனர் வாதிக்கு 2024ம் ஆண்டு பள்ளியில் செலுத்திய விடுதி கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவிற்கான ரசீதுகள் எண்ணம் – 6 வா.சா.ஆ.3 ஆகும். மைனர் வாதியின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.4 ஆகும்.

(அசலுடன் ஒப்பிடப்பட்டது). 09.10.2020ம் தேதிய தபசில் சொத்து பிரதிவாதிக்கு கிடைத்ததற்காக பதிவு குடும்ப ஏற்பாடு ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகும். தபசில் சொத்திற்கான கணினி பட்டா (பட்டா எண்.1029) வா.சா.ஆ.6 ஆகும். எனவே பிராதுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.